DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 56/2021 Deposition of Witness for : P.W.20**

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவக்குமார் | Calling | |
| Father's Name | : நடராஜன் | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 09-02-2026

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாவட்ட ஆதி திராவிட நல அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2018 ஆம் வருடம் தாராபுரம் வட்டாட்சியர் ஆக பணியில் இருந்த போது மூலனூர் காவல் நிலையத்தில் இருந்து பெறப்பட்ட குற்ற எண் 287/ 2018 குற்றவியல் நடைமுறை சட்டபிரிவு 174 படியான முதல் தகவல் அறிக்கையை 24.10.2018 தேதி பெற்றேன். அதனுடன் புகார் மனு பார்வை மகஜர், மாதிரி வரைபடம், பிரேத விசாரணை அறிக்கை, சாட்சியின் வாக்கு மூலங்கள் ஆகியவை இணைக்கப்பட்டிருந்தன. மேற்படி வழக்கு 302 இதசவின் கீழான வழக்காக மாற்றப்பட்டதாக மூலனூர் காவல் நிலையத்தில் இருந்து பெறப்பட்ட தகவல் அடிப்படையில் மேற்படி ஆவணங்களை தாராபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். நான் தாராபுரம் நீத்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு **அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.24.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

24.10.2018 தேதி நான் வெளியில் பணியில் இருந்ததால் மேற்படி ஆவணங்களை என்னுடைய அலுவலகத்தில் பெற்று இருக்கிறார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது மேற்கண்ட ஆவணங்கள் எத்தனை

மணிக்கு என்னுடைய அலுவலகத்தில் பெறப்பட்டது என்பது குறித்து குறிப்பாக நேரத்தை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கில் எந்தவிதமான விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.09 19:58:13 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.